மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர் நீதிமன்றம்,
வத்திராயிருப்பு

**அசல் வழக்கு எண். 4/2024**

வா.சா. 1 மலைச்சாமி, S/o ராமர்
நாள்: 25.03.2026

சாட்சி மீண்டும் அழைக்கப்பட்டு சத்தியபிரமாணம் செய்யப்பட்டு விசாரணை செய்யப்பட்டார்.

**1 மற்றும் 2 பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை:**

1) நான் என்ன படித்துள்ளேன் என்றால் நான் படிக்கவில்லை. எனது சகோதரருக்கும் எழுதப் படிக்கத் தெரியாது என்று சொன்னால் சரிதான். 1வது வாதி என் உடன் பிறந்த சகோதரர் என்று சொன்னால் சரிதான். 2வது வாதி 1வது வாதியின் மனைவி என்று சொன்னால் சரிதான். 1வது வாதி தான் வழக்கு சொத்தை கிரையம் பெற்றார் என்று சொன்னால் சரிதான். வாதிகளின் அனுபவத்தை 1 மற்றும் 2 பிரதிவாதிகள் இடைஞ்சல் செய்யக்கூடாது என்று நிரந்தர உறுத்து கட்டளை பரிகாரம் கேட்டு இந்த வழக்கு வாதிகளால் தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்று சொன்னால் சரிதான். பொது அதிகார முகவர் என்ற ஸ்தானத்தில் தான் நான் நிரூபண வாக்குமூலம் தாக்கல் செய்துள்ளேன் என்று சொன்னால் சரிதான். வழக்கு விபரங்கள் எனக்குத் தெரியும் என்கின்ற காரணத்தினால் தான் என்னை வழக்கு தரப்பினராக இந்த வழக்கில் சேர்த்துள்ளார்கள் என்று சொன்னால் சரிதான். வாதிகளின் வாரிசு என்ற அடிப்படையில் என்னை இந்த வழக்கில் கட்சி சேர்க்கவில்லை என்று சொன்னால் சரிதான்.

2) நான் தாக்கல் செய்துள்ள நிரூபண வாக்குமூலத்தில் கூறியுள்ள சங்கதிகள் அனைத்தும் 1வது வாதியின் வழக்கறிஞர் சொல்லித்தான் எனக்கு தெரியும் என்று சொன்னால் சரிதான். வழக்குரையில் சொல்லியுள்ள சங்கதிகள் எனக்கு நேரடியாக தெரியாது என்று சொன்னால் தெரியும். வழக்குரையில் குறிப்பிட்ட சங்கதிகள் குறித்து எனக்கு தெரியும் என்று வாதி தாக்கல்

செய்துள்ள வழக்குரையில் எங்கேயும் குறிப்பிட்டு சொல்லவில்லை என்று சொன்னால் சரியல்ல. வழக்கு விபரங்கள் என்னை தவிர வேறு யாருக்கும் தெரியாது என்று சொன்னால் சரிதான். வாதிகளுக்கு வாரிசுகள் கிடையாது என்று சொன்னால் சரிதான். வாதிகளுக்கு வாரிசுகள் எதுவும் இல்லை என்பதை காண்பிக்க ஆவணங்கள் எதுவும் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்று சொன்னால் சரிதான். வா.சா.ஆ.1 வாதியால் தாக்கல் செய்யப்பட்டு என்னால் குறியீடு செய்யப்பட்ட ஆவணம் என்று சொன்னால் சரிதான். வா.சா.ஆ.1 ஆவணம் எந்த நோக்கத்திற்காக நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றால் எங்களுடைய உரிமையை காண்பிக்க தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

3) வா.சா.ஆ.1 ஆவணம் எங்களுடைய உரிமையை காண்பிக்கவா அல்லது அனுபவத்தை காண்பிக்கவா என்றால் எங்களுடைய உரிமையை காண்பிக்க தாக்கல் செய்யப்பட்ட ஆவணம். வா.சா.ஆ.1 ஆவணம் பதிவு செய்யப்படாத கிரைய ஒப்பந்த ஆவணம் என்று சொன்னால் சரிதான்.

(1 மற்றும் 2 பிரதிவாதிகளின் வழக்கறிஞரின் வேண்டுகோளுக்கிணங்க குறுக்கு விசாரணை தொடர்ச்சி ஒத்திவைக்கப்படுகிறது)

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்ல சொல்ல நான் சொல்ல தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு என்னால் சரிபார்க்கப்பட்டு சாட்சிக்கு படித்துக்காட்டப்பட்டு அவரால் ஒத்துக்கொண்டு கையெழுத்திட்டுள்ளார்.

ஒம்/-எம்.இராமநாதன்/-

மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர்
வத்திராயிருப்பு